
# அரண்

## பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

(Peer Reviewed Journal Multidisciplinary)

ISSN: 2582-399X



காலாண்டு இதழ்
(ஜனவரி, ஏப்ரல், ஜூலை, அக்டோபர்)
ஆகிய மாதங்களில் வெளிவரும்

Vol:8 Issue :31 July 2026

கோட்டை:8 வாயில்:31 ஜூலை 2026

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research

# EDITORIAL BOARD

Founder / Editor in Chief

**Dr PRIYAKRISHNAN**

Publisher

**MR P. JAYAKRISHNAN**

Editorial Board Members

**Dr V SELVAKUMAR**

Professor And Head of The Department of Maritime History and Marine Archaeology Tamil University, Thanjavur, TamilNadu, India

**Dr. Ravindran A/L Maraya**

Head of Department & Senior Lecturer, Department of Indian Studies (DIS), Universiti Malaya, Kuala Lumpur, Malaysia.

**Dr Silllalee A/L S.Kandasamy**

Senior Lecturer, Department of Indian Studies, Universiti Malaya,

**Dr. S. KAVITHA**

School of Indian Languages and Comparative Literature,Tamil University, Thanjavur. TamilNadu, India

**Dr.K.DAYANIDHI**

Assistant Professor & Head i/c , Department of Vaishnavism , University of Madras, TamilNadu, India.

Copy Right @ Aran international e journal of Tamil Research/Dr. Priyakrishnan

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

*International e Journal of Tamil Research*

# EDITORIAL BOARD

**Dr O.MUTHIAH**

Professor of Tamil, The Gandhigram Rural Institute (Deemed to be University)
Gandhigram - 624 302 Dindigul District, TAMIL NADU

**DR UMADEVI**

Professor In Tamil, Department of Modern Indian Languages And
Literery Studies University of Delhi,Delhi.

**DR JAGADEESAN.T.**

Assistant Professor of Tamil, Department of Indian Languages,
Faculty of Arts, Banaras Hindu University,
Varanasi- 221005, Uttar Pradesh,India.

**DR SENTHIL PRAKASH.S**

Teacher – in- charge/Assistant professor (SG),Department of
Tamil, Institute of Languages, Literature& culture,
Visva – Bharathi University,Santiniketan,West
Bengal, India -731235

**DR R TAMILSELVAN**

Assistant professor, Aligarh Muslim University, Uttar Pradesh,India-202002

**Dr SWARNAVEL ESWARAN**

Associate Professor Departments of English, and Media and Information
Michigan State University. USA.

**Dr (Ms.) NILANKA LIYANAGE**

Senior Lecturer in Dance ,Department of Dance,Drame&Theatre Arts,
Swamy Vipulananda Institute of Aesthetic Stidies,
Eastern University Srilanka

அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

Aran

International e Journal of Tamil Research


# EDITORIAL BOARD

**Mrs THULSIVANTHANA UDAYASHANKAR**

Senior lecturer Gr II in English, Swamy Vipulananda Institute of Aesthetic Stidies ,Eastern University, Srilanka

**Dr B. DHANANJAYAN**

Associate Professor, Sir Theagaraya College, Old Washermenpet, Chennai - 600 021.

**Dr P.SEKAR**

Assistant Professor,Department of Education,Govt.Institute of Advanced Study in Education,Saidapet,Chennai-600015.

நிறுவனர்/பதிப்பாளர்/நிர்வாக ஆசிரியர்

இதழாக்கம்

திரு ப. ஜெயகிருஷ்ணன்

முதன்மை ஆசிரியர்

முனைவர் பிரியாகிருஷ்ணன்


**+917299587879**

www.aranejournal.com

aranjournal@gmail.com

அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழில் வெளிவரும் ஆய்வுக்கட்டுரைகள் அனைத்தும் (Peer Review)பீர் ரிவியூ செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தமிழ்



# எஸ். ராமகிருஷ்ணன் நாவல்களில் பெண்களின் வாழ்வியல்

*The Portrayal of Women's Lives in the Novels of S. Ramakrishnan*


**த. சத்தியா,**

பதிவு எண் : 23250A6001

முனைவர் பட்ட ஆய்வாளர்,

தமிழாய்வுத்துறை,

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,

விழுப்புரம் - 605 602.

**முனைவர் ரு. அசோகன்,**

நெறியாளர்,

இணைப்பேராசிரியர்

தமிழாய்வுத்துறை,

அறிஞர் அண்ணா அரசு கலைக்கல்லூரி,

விழுப்புரம் - 605 602.

***Researcher:***

*T. Sathiya,*

*Registration No: 23250A6001,*

*Ph.D. Research Scholar,*

*Department of Tamil,*

*Arignar Anna Government Arts College,*

*Villupuram - 605 602.*

***Supervisor / Guide:***

*Dr. R. Ashokan,*

*Supervisor,*

*Associate Professor,*

*Department of Tamil,*

*Arignar Anna Government Arts College,*

*Villupuram - 605 602.*

*Abstract*

*One of the highest virtues of humanity is respecting a human being as a fellow human. However, male-dominated society often fails to respect women even as fellow living beings. The life struggles, social issues, and societal rejections faced by women became the catalyst for the rise of feminist ideologies. Women experience hardships at various stages of life. We can observe these challenges manifesting in education, love, lack of rights, marital conflicts, dowry issues, the rigid insistence on female chastity, and the plight of widowhood. Eradicating these flaws from women's lives will serve as a foundational pillar for social change. In this context, this research paper highlights the portrayal of women's lives and struggles in the novels of S. Ramakrishnan.*

***Keywords**: Feminism, Yaamam, Thuyil, Nimitham, Sancharam.*

**ஆய்வுச் சுருக்கம்:**

மானுடத்தின் உயர்ந்த பண்புகளின் ஒன்று மனிதனை மனிதனாக மதிப்பது. ஆனால் ஆண் சமூகம் பெண்ணைச் சக உயிரியாகக் கூட மதிப்பதில்லை. பெண்கள் சந்தித்த வாழ்வியல் போராட்டங்களும், சமூகப் பிரச்சனைகளும், சமூக மறுப்புகளும் பெண்ணிய சிந்தனைகளாகத் தோன்றக் காரணமாகின்றன. பெண்கள் வாழ்வில் பல்வேறு நிலைகளில் இடர்ப்பாடுகள் வருவதைக் கல்வி, காதல், உரிமையின்மை, மணவாழ்க்கையில் ஏற்படும் இடர்பாடுகள் வரதட்சணை சிக்கல், பெண் கற்பு மட்டும் வலியுறுத்தல், விதவை நிலை முதலான சிக்கல்கள் பெண்களுக்கு ஏற்படுவதை அறிய முடிகிறது. பெண்களின் வாழ்வில் காணப்படும் இக்குறைபாடுகளை நீக்குவது சமுதாய மாற்றத்திற்கு உறுதுணையாக அமையும். அவ்வகையில் எஸ் ராமகிருஷ்ணன் நாவல்களில் பெண்களின் வாழ்வியலை எடுத்துரைப்பதாக இவ்வாய்வு கட்டுரை அமைகின்றது.

**குறிப்புச் சொற்கள்**: பெண்ணியம், யாமம், துயில், நிமித்தம், சஞ்சாரம்.

**முன்னுரை:**

இலக்கியத்தில் பெண்ணியம் பற்றிய சிந்தனைகளை முன்வைப்பதன் மூலம் பெண்ணியத்தின் தேவையை வரையறுத்திட இயலுகிறது. இலக்கியத்தில் சமூகப்பண்பாட்டுத் தளங்களில் பெண்களின் இருத்தலை அறிந்துக்கொள்ளவும், அவர்களின் மீதான வன்முறையை உணர்ந்து கொள்ளவும் பெண்ணியம் உதவுவதால் இதுபற்றி அறிதல் அவசியமாகிறது. மேலும் பெண்களின் வாழ்க்கை எந்தளவு சிக்கல் நிறைந்தது என்பதையும் இவரின் நாவலைக் கொண்டு ஆராயலாம்.

**தமிழ் இலக்கியத்தில் பெண்ணியம் :**

பெண்ணியம் பெண்ணின் சமூக நிலையை மறுவாசிப்புக்கு உட்படுத்த வேண்டிய தேவையை வலியுறுத்துகிறது. இது ஆணின் பண்பாட்டுக் கட்டமைப்பில் பாலியல் உருவாக்கம் ஊடுருவியிருப்பதையும் அதனால் பழைய மதிப்பீடுகள், புதிய பண்பாட்டு மதிப்பீடுகளில் எத்தகைய மாற்றத்தைப் பெறுகின்றன என்பதையும் அறிய உதவுகிறது. இவற்றைத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், பக்தி இலக்கியங்கள் காவியங்கள் புராணங்கள் நவீன இலக்கியங்கள் ஆகியவற்றில் வைத்து எண்ணிப்பார்க்க முடிகிறது.

**தொல்காப்பியம் :**

தமிழ் இலக்கியத்தின் தொன்மையான நூல்களில் ஒன்றான தொல்காப்பியம் ஆண்களின் நிலை குறித்து “பெருமையும் உரனும் ஆடூஉமேன”1என்று பெருமையும் வலிமையும் ஆணுக்குரிய பண்புகளாகவும், “அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல் நிச்சமும் பெண்பாற்குரிய”2 என்று பெண்ணுக்குரிய பண்புகளாகவும் சொல்லப்படுகிறது. மேலும் “கற்பு” பெண்ணிற்குக் கட்டாயமாக்கப்படுகிறது.

**சங்க இலக்கியம் :**

சங்கஇலக்கியங்களில் பெண்ணின் உரிமை தடைசெய்யப்படவில்லை. பெண் கல்வி கேள்விகளில் ஓரளவு புலமை பெற்றிருந்தாள். “ பெண் பிறவி இழிவுக்குரியது என்று யாரும் கருதவில்லை. மணக்குடைக் கொடுமை இல்லை. நல்லிற்பாவையன்ன நல்லோர் கணவன், என்று பதிற்றுப்பத்திலும், மறுவில் கற்பின் வாணுதல் கணவன்” என்று திருமுருகாற்றுப்படையிலும், பெண்ணுக்குப் பெருமை தேடித்தரும் வகையில் சான்றோர் குறிப்பிட்டுள்ளனர்.”3 சங்க காலத்திலும் பெண்ணிற்கு கற்பு வலியுறுத்தப்பட்டுள்ளது. ஆணைத் தலைமையாகக் கொண்ட குடும்பம் வரவேற்கப்படுகிறது.

திருக்குறள்:

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றான திருக்குறள்

**“மனைத் தக்க மாண்புடையளாகித் தற்கொண்டான்**

**வளத்தக்ககாள் வாழ்க்கைத் துணை”4 என்றும்,**

**“பெண்ணின் பெருந்தக்க யாவுள கற்பென்னும்**

**திண்மை உண்டாகப் பெறின்”5**

என்றும் வள்ளுவம் கூறுவதிலிருந்து குடும்பம், கற்பு இரண்டும் பெண்ணிற்குத் தேவை என்று வலியுறுத்துவதை அறியமுடிகிறது.

**காப்பியம்:**

நீதி நூல்களிலிருந்து காப்பியங்களிலும் அறவழி வாழ்க்கை நடத்துதல், இல்லறத்தைப் பேணிக்காத்தல், கணவனைத் தெய்வமாக வழிபடல் ஆகியன பெண்ணின் கடமையாக வரையறுக்கப்பட்டுள்ளன. இக்காலத்தில் ஆண்கள் குடும்ப வளத்தைக் காக்க கூடிய நிலையில் கற்புடன் திகழும் பெண்களைத் தெய்வமாக கருதுகின்றனர். ஆனால் மூடப்பழக்க வழக்கங்களைச் சாடும் சித்தர்கள் பெண்களை வெறும் இன்பத்தைத் தரும் போகப் பொருளாகவும் பேய் என்றும் வேறுவிதமாகக் கூறுகின்றனர். பெண்ணடிமைத்தனத்தை வலியுறுத்தும் புராணக் காலத்தில் பெண்ணின் நிலை மேலும் தாழ்நிலை அடைந்துள்ளது.

**பக்தி இலக்கியம்:**

பக்திக் காலத்தில் சமயங்களின் எழுச்சியால் சாதிக் கட்டுகளை மீறிப் பெண்கள் கோவில் வழிபாடு, விருந்தோம்பல், சமூகப் பணிகளில் கலந்து கொள்ளுதல் ஆகியவற்றை மேற்கொண்டனர்.

**நாவல்களில் பெண்ணியம்:**

பெண்ணியம் குறித்த விழிப்புணர்வு தமிழ் நாவல்களில் தொடக்க காலம் தொட்டே இருந்து வந்திருக்கிறது. தமிழில் முதன்முதலில் எழுந்த நாவலான வேதநாயகப் பிள்ளையின் பிரதாபமுதலியார் சரித்திரம் (1879), தொடர்ந்து வந்த மாதவையாவின் பத்மாவதி சரித்திரம் (1898), இரண்டும் பெண்கல்வி, விதவை, மறுமணம் முதலியனவற்றைப் பேசுகின்றன. “ தமிழில் முதல் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தில் பிரதாப முதலியாரின் மனைவியாக வரும் ஞானாம்பாள், கல்வி கற்றவளாகவும், போராடும் குணம் உள்ளவளாகவும் காணப்படுகிறாள் காலம் காலமாக இருந்த பெண்ணடிமைச் சமூகத்தில் இருந்து விடுபடும் முதல் பெண்ணாக இவள் காட்டப்படுகிறாள்.”6

“தமிழின் முதல் நாவலாசிரியராகத் திகழ்வதற்கு முனிசீப் வேதநாயகம் பிள்ளையிடத்திருந்த தகைமைகள் பெண் விடுதலை இயக்கம் சன்மார்க்க நெறிப்பிரச்சாரம், சமூக சீர்திருத்தம் போன்ற துறைகளில் அவருக்கிருந்த ஈடுபாடு ஆகியவை வேதநாயகம் பிள்ளையின் பெண் வி;டுதலை உணர்வைத் தோற்றுவிக்கக் காரணிகளாக இருந்தன.”7 என்ற கா. சிவத்தம்பியின் கூற்றை இங்கே கூறலாம்.

**பெண்களின் பிரச்சனைகள்:**

சமூக இயக்கத்திற்கு ஆண் பெண் முரண்பாடு அவசியமானதாகும். எனவே தான் இந்த இயற்கை முரணை இணை முரண் என்பர். உலகில் சரிபாதியாக இருக்கும் பெண்கள் இல்லையென்றால் இயக்கம் இல்லை. ஆனால் சேர்ந்தே இயக்கவேண்டிய நிலையில் ஆண் பெண்ணைக் கேவலமாகவும், கீழாகவும் கருத முற்பட்டான். இதனால் பெண் அடிமை நிலைக்குத் தள்ளப்பட்டாள். இது வரலாற்றுக்கு முற்பட்ட காலந்தொட்டே இருந்து வருகின்றது எனலாம்.

“நமது சமூக அமைப்பு தந்தைவழிச் சமூக அமைப்பாக மாற்றம் பெற்ற காலத்திலிருந்து பெண்களின் நிலை கீழ்நிலைப் படுத்தப்பட்டே வந்துள்ளது. பெண் காமநோக்கத்தில் தூக்கிச் செல்லப்பட்டிருக்கிறாள். பரிசுப்பொருளாக வழங்கப்பட்டிருக்கிறாள். ஆடவர் சபையில் ஏலனமாக விடப்பட்டிருக்கிறாள். அரண்மனையின் அந்தப்புரங்களுக்கு அடிமையாக விற்கப்பட்டிருக்கிறாள். அரசியல் ஒப்பந்தங்களில் பேரப் பொருளாகப் பேசப்பட்டிருக்கிறாள். சூதாட்டங்களில் சூதுப் பொருளாகப் வைக்கப்பட்டிருக்கிறாள் கலை இலக்கியங்களில் அழகுப் பொருளாக வைக்கப்பட்டிருக்கிறாள்.”8 இவ்வாறு காலந்தோறும் பெண்கள் நடத்தப்பட்டு வந்த நிலையினை எடுத்துரைக்கின்றார் க. பஞ்சாங்கம்.

பல்வேறு துறைகளிலும் வளர்ச்சியடைந்துள்ளனர் பெண்கள் இருப்பினும் விழிப்புணர்வு மிகுந்த இந்தக்கால கட்டத்திலும் பெண்கள் போகப் பொருளாகவும் இரண்டாம் நிலையிலுமே மதிக்கப்படுகின்றனர்.இதில் உயர்ந்த, தாழ்ந்த அல்லது படித்த, படிக்காத பெண்கள் என்ற பேதம் இருப்பதில்லை. படித்த, உயர்ந்த நடுத்தர வர்க்கத்துப் பெண்களுக்கு, அலுவலகங்களிலும் அரசியல் மற்றும் பொது இடங்களிலும் ஏற்படுகின்ற அவமானங்களும் பெண்கள் மீதான கொடுமைகளாகவே கருதத்தக்கன.

**திருமணமும் பெண்ணடிமைத் தனமும்:**

இந்தியாவில் குறிப்பாக தமிழகச் சுழலில் ஒரு பெண்ணுக்கு திருமணம் என்பது அவள் சார்ந்த குடும்பத்திற்கு ஒரு சவாலாகவே இருப்பதைக் காணமுடிகிறது. அவரவர் குடும்பத் தகுதியை மீறிச் செலவு செய்ய வேண்டியுள்ளது. இல்லையென்றால் பெண்ணின் திருமணம் வெறுங்கனவாகவே இருந்துவிடுகிறது.

“ஆண் சார்ந்த திருமண உறவின் மூலம் சமுதாயத்தில் பெண்ணின் மதிப்பை அடியோடு மாற்றிச் சிதைத்து அவளுக்குண்டான உண்மையான மதிப்பைக் கெடுத்துவிட்டது. இதில் கற்றவர்கள், கல்லாதவர்கள் என்று யாரும் தப்பவில்லை”9 எனக் குறிப்பிடுகின்றார் இராஜம் கிருஷ்ணன்.

தன்னைத் திருமணம் செய்து கொள்ளும் கணவனைப் பற்றியோ திருமண வாழ்வு பற்றியோ, திருமணம் குறித்து தன் கருத்துக்களைக் கூறவோ, சிந்திக்கவோ பெண் அனுமதிப்பதில்லை. அதையும் தாண்டி தன் கருத்துக்களைக் கூறும் பெண்ணிடம் பெற்றோர்களும் மற்றவர்களும் நீ இவ்வாறு பேசுவது பெண்ணுக்கு அழகல்ல பெண்ணா இலட்சணமா இரு இவ்வாறு பேசினால் யார் உன்னைத் திருமணம் செய்து கொள்வார்கள் என்று கூறி பெண்ணை அடக்கி விடுவதால்; அவளுடைய சொந்த விருப்பு, வெறுப்புகளுக்கு மதிப்பளிக்காததுடன் அவளுடைய சுயசிந்தனையும் மழுங்கி விடுவதை நம்மால் பார்க்கமுடிகிறது. இவ்வாறான நிகழ்வுகள் அன்றாடம் நாம் காணும் நடைமுறை வாழ்க்கையில் நடைபெற்றுக் கொண்டுதான் இருக்கின்றன. அவ்வகையில் துயில் நாவலில் இடம்பெறும் சின்னராணியின் திருமணம் குறித்து அவரின் தந்தை பின்வருமாறு கூறுகிறார்.

"அவளைப் போல மெலிந்து கறுப்பாக உள்ள பெண்ணை கட்டிக்கொள்ள ஒருத்தனும் வரமாட்டான் என்று அவளைப் பெற்ற அய்யா கூட கோபத்தில் கத்திருக்கிறார். சின்னராணிக்குள் அந்த பயம் இருந்து கொண்டேயிருந்தது"10 துயில் ப.41 சின்னராணியின் தந்தை தன் மகள் திருமணத்தை நினைத்துக் கவலைப்படுகின்றார் என்பதையும் அறிய முடிகிறது. மேலும் பொருளாதரத்தில் பின்தங்கிய சொத்துரிமை இல்லாத அடிமட்டத்துப் பெண்களை ஆண்கள் எளிதில் ஏமாற்றித் தங்கள் ஆதிக்கச் சக்தியால் ஒடுக்கித் துன்புறுத்துவதைப் படம் பிடித்துக்காட்டுகின்றார்.

"அப்பாவிற்கு அம்மாவைப் பிடித்திருப்பதற்கு காரணம் அவள் செவப்புத் தோல் மட்டும் தானாம். பத்துத் தரம் படுத்து எழுந்திருச்ச பிறகு அவள் சாப்பாட்டுக்கு வழியில்லாத குடும்பத்தில் இருந்து வந்தவதானேனு உறுத்த ஆரம்பிச்சிருச்சாம் நாளைக்குப் பத்து தரம் எளக்காரமாகத் திட்டுவதும் அவமானப்படுத்துவதுமாக இருந்தாராம்"11 யாமம் ப.77

இவ்வாறு கூறுவதின் மூலம் பெண் ஒரு போகப் பொருளாகவே இருக்கிறாள் என்பதை தெளிவாக அறியமுடிகிறது. இன்றும் நமது சமுதாயத்தில் பெண் தனக்கான பாலியல் உறவு முறைகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கான உரிமை மறுக்கப்படுகிறது. அவள் பலருடைய நிர்ப்பந்தத்திற்கும் உட்படுத்தப்படுகிறாள். இது நாடு, மொழி, சாதி குடும்பம் என்று எல்லா நிலைகளிலும் காணப்படுகிறது எனலாம்.

பெண்கள் ஆணைச் சார்ந்துதான் வாழவேண்டும் என்கிற கட்டாயமும், பெண்களுக்குப் பொருளாதாரச் சுதந்திரமின்மையும் ஆகிய இவைகளே பெண்கள் இத்தகைய கயவர்களிடம் சிக்கி அல்லலுற வேண்டியுள்ளது.

**பாலியல் வன்முறை:**

பெண் என்பவள் கருத்தியல் ரீதியாகப் பின்தள்ளப்பட்டிருக்கும் அதே வேளையில் அவளை ஒரு போகப் பொருளாகவும் பார்க்கின்ற மனோபாவம் அவள் மீதான உடலியல் ரீதியான வன்முறைக்கு வித்திடுகிறது எனலாம். ஒருபெண் ஏழையாக அல்லது அபலையாக இருக்கும் பட்சத்தில் அவள் மீதான பாலியல் வன்முறை என்பது மிகக் கேவலமானதாகவும், அருவருக்கத்தக்கதாகவும் அமைந்துவிடுகிறது.

ஆண் என்ற மனோபாவத்தோடு பொருளாதாரப் பலம், ஆள் பலம் சேர்கின்ற போது பெண் இரக்கமற்ற முறையில் பாலியல் வன்முறைக்கு ஆளாக்கப்படுகிறாள்.

“கிளாரிந்தா பால்யத்திலிருந்தே அத்தையின் வீட்டில் வளர்ந்ததையும் உணவகம் ஒன்றில் பணிப்பெண்ணாக வேலை செய்து கஷ்டப்பட்டதையும் பதினாலாவது வயதில் அவளைத் தனியறையொன்றில் பெப்பர் மிண்ட் ஒன்றைத் தந்து உணவகத்தின் பரிசாரகன் ஒருவன் பலவந்தமாக உடலுறவு கொண்டதையும் நினைவுபடுத்தி அழுதபோது பிரான்சிஸ் அவளைத் தேற்றி ஆறுதல் படுத்தினான்”12; யாமம். ப.33.

வயிற்றுப் பிழைப்புக்காக நான்கு வீட்டில் பாத்திரம் தேய்த்துப் பிழைக்கச் செல்லும் பெண்களின் கற்பு அங்கே இருக்கும் கயவர்களால் சூறையாடப்படும் நிலையைக் காட்டுகிறார் படைப்பாசிரியர். பெண்களுக்குப் பணித்தளத்திலும் பாதுகாப்பு இல்லை என்பதும், பணிப் பெண்களின் கற்பு முதலாளிகளால் அற்பமாக எண்ணப்படுவதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ஒரு பெண்ணின் இசைவின்றி அவளுடைய தூய்மை பறிக்கப்படும்போது அவள் எவ்விதத்திலும் களங்கப்பட்டவள் அல்ல. அவளைக் கற்பிழந்தவள் என்றும் கூற இயலாது. பாலியல் வன்புணர்ச்சி செய்கின்ற ஆடவனைச் சட்டத்தின் பிடியில் பிடித்துக் கொடுக்க மறுக்கிறது. காரணம் பாதிக்கப்பட்ட பெண் அவளை அந்நிலைக்கு உள்ளாக்கிய ஆணைக்காட்டிக் கொடுப்பதால் பெண்ணின் வாழ்க்கைப் பாதிக்கப்படும் என்பதனாலேயே ஆகும்.

ஆணாதிக்க அத்துமீறல் செய்த ஆண்களை விட்டுவிட்டுப் பெண்களை குற்றவாளியாக்கும் சமூக அவலம் மாறியாக வேண்டும் என்பதும் ஆசிரியரின் கருத்தாக அமைகிறது.

**முடிவுரை:**

இவரது நாவல்கள் பிரச்சனைகளை எதிர்கொள்வது அடக்கு முறைக்கு எதிராக போராடுவது தனித்து வாழ்வது விழிப்புர்ணர்வை ஏற்படுத்துவது ஆகிய பல நிலையிலும் பெண்ணியச் சிந்தனைகளை வெளிப்படுத்துவனவாக அமைந்துள்ளன இருப்பினும் குடும்பச் சிக்கலாக இருந்தாலும் சமூகச் சிக்கலாக இருந்தாலும் அவை அனைத்தும் ஆணாதிக்கச் சமுதாயத்தின்

பின்னணியில்தான் ஏற்படுகின்றன. எனவே நம் சமூக அமைப்பில் குடும்பம், மணவாழ்வு என்பதை பற்றிய கருத்தாக்கங்கள் மாறாத வரையில் சமூக அமைப்பு மாற்றம் பெறாத வரையில் இத்தகைய சிக்கல்கள் தொடர்ந்து இருந்து கொண்டேயிருக்கும் என்பதில் ஐயமில்லை.

பார்வை நூல்கள்:


1. தொல்காப்பியர் தொல்காப்பியம், களா. நூற்பா.7
2. தொல்காப்பியம் களா. நூற்பா.8
3. சு. இளங்கோ , பாரதிதாசன் படைப்புக்கலை.ப.309
4. திருவள்ளுவர், திருக்குறள் - 51.
5. திருவள்ளுவர், திருக்குறள் - 54.
6. ச.மணி தமிழ் நாவல்களில் பெண்ணியம், தமிழ் இணையக்கல்வி கழகம் - ப 20.
7. கா. சிவதம்பி நாவலும் வாழ்க்கையும், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ், சென்னை - ப 52.
8. க. பஞ்சாங்கம், பெண் மொழி புனைவு, - ப.2
9. இராஜம் கிருஷ்ணன் காலந்தோறும் பெண், - ப.59.
10. எஸ். ராமகிருஷ்ணன் துயில், - ப.41
11. எஸ் ராமகிருஷ்ணன் யாமம், ப- 77
12. மேலது - ப - 33.


***Reference***


1. Tolkappiyar, *Tolkappiyam*, Kalaviyal, Sutram 7.
2. *Tolkappiyam*, Kalaviyal, Sutram 8.
3. Su. Ilango, *Bharathidasan Padaippukalai* (The Creative Art of Bharathidasan), p. 309.
4. Thiruvalluvar, *Thirukkural* - 51.
5. Thiruvalluvar, *Thirukkural* - 54.
6. Sa. Mani, *Tamil Navalgalil Penniyam* (Feminism in Tamil Novels), Tamil Virtual Academy - p. 20.
7. Ka. Sivathamby, *Navalum Vazhkkaiyum* (Novel and Life), New Century Book House, Chennai - p. 52.

8. Ka. Panchangam, *Pen Mozhi Punaiyu* (Fiction in Female Language / Female Linguistic Discourse), - p. 2.
9. Rajam Krishnan, *Kaalandhorum Pen* (Women Through the Ages), - p. 59.
10. S. Ramakrishnan, *Thuyil* (Slumber/Sleep), - p. 41.
11. S. Ramakrishnan, *Yamam* (The Midnight Hour), . 77.
12. Ibid P. 33.

ARAN International e-Journal of Tamil Research

# அரண்

பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழ்

## அறிவிப்பு / Announcement

அன்பான தமிழ்ச் சொந்தங்களே

வணக்கம்.
வரும் 2026, அக்டோபர் மாதம் வெளிவரும் அரண் பன்னாட்டுத் தமிழாய்வு மின்னிதழுக்கான ஆய்வுக் கட்டுரைகள் ஆய்வாளர்களிடமிருந்து வரவேற்கப்படுகின்றன.

கட்டுரை வந்து சேர வேண்டிய கடைசி நாள் - அக்டோபர் 10. அதற்கு பின் வரும் கட்டுரைகள் அக்டோபர் இதழில் இடம்பெறாது என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.

www.aranejournal.com